V.—ADOPTION OF THE REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES *RE* THE DEFINITION OF THE TERM "PRECINCTS OF THE HOUSE".

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I move—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

MR. SPEAKER : Motion moved—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

SRI M. KALYANASUNDARAM : இதில் ஒரு யோசனை மட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ரிபோர்ட் நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்பதில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை. இந்த செக்ரிடேரியட் கட்டிடத்தில் ஒவ்வொரு பகுதியும் குறிப்பிட்டிருக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையை குறிப்பிடவில்லை. சட்ட மன்றம், கமிட்டிகள் அறை, காண்டீன் என்று குறிப்பிட்டிக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையும் சேர்க்கும் முறையில் இதை திருத்த வேண்டும். இதற்காக அதிகாரம் சபாநாயகரிடத்தில் இருக்கிறது.

சட்ட சபை கூடும்போது அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய அறையை இதில் சேர்க்கவேண்டும். சபாநாயகருக்கு அதிகாரம் இருப்பதால், இவைகளை சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு இதை நான் வரவேற்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member must have come to my room and explained all these points to me. Anyhow, I shall consider them.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அறிக்கையைப் பற்றி பொதுவாக நான் ஒன்றும் சொல்லப்போவது இல்லை. இந்த இரண்டு அறிக்கைகளையும் சமர்ப்பித்த கமிட்டியின் பதவி காலம் முடிவடைந்து ஒரு புதிய கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஒரு வருஷ காலமாக நல்ல முறையில் இயங்கி வந்த இந்த கமிட்டிக்கு சபையின் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the time appointed for the presentation of the Report of the Select Committee on the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958), be extended till the middle of November 1958."

[Sri R. Venkataraman] [5th April 1958

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி இரண்டொரு விளக்கங்கள் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோதாவை பிரேரேபிக்கின்ற போது புது சட்டம் இந்த வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி அமுலுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஆனால் திருத்தக் கமிட்டி கூடிய காலத்தில், அங்கு வந்து சாட்சியம் சொன்னவர்கள் "இதை அவசரமாக நிறைவேற்றக்கூடாது, சிறந்த முறையில் நன்றாக பரிசீலனை செய்த பிறகு தான் கொண்டு வரவேண்டும்" என்று அவர்கள் அபிப்பிராயம் கூறினார்கள். இந்த புது சட்டமானது 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதி அமலுக்கு வந்தால் போதும் என்றும் அபிப்பிராயம் சொல்லப்பட்டது. ஆகவே இப்பொழுது அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: "ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்". 1-4-1959-ல் புது சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்வதனால் வியாபாரிகள் பழைய முறையிலேயே கணக்குகளை வைத்திருந்தால் போதுமா என்கிற விவரத்தை தெளிவாக்க வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது 1939-ம் வருஷத்திய சட்டம் அமலில் இருக்கும் என்று சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி எந்த விதமான குழப்பமும் இருப்பதற்கு இடம் இல்லை. புது சட்டம் வருகின்ற வரையில் பழைய சட்டமே அமலில் இருக்கும் என்று திட்டவட்டமாக சர்க்கார் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, ஒரு வருஷத்தில் நடுவில் கணக்குகளை மாற்ற வேண்டும் என்று சொன்னால் அதனால் கஷ்டங்கள் வரும் என்ற காரணத்தினால் புது சட்டம் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the time appointed for the presentation of the Report of the Select Committee on the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958), be extended till the middle of November 1958."

The motion was put and carried.

VII.—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—*cont.*

DEMAND IV—FOREST DEPARTMENT AND DEMAND XXXIV—CAPITAL OUTLAY ON FORESTS.

MR. SPEAKER: Now, Demand IV—Forest Department and Demand XXXIV—Capital Outlay on Forests will be taken up for discussion and two hours are allotted to them. At 11-30 I will put them to the vote. Then Demand VI—Motor Vehicles Act Administration will be taken up for discussion. Now the Hon. Minister concerned will move his Demand.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 56,56,400 under Demand IV—Forest Department."

"That the Government be granted a sum not exceeding Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests."